மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 347, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

347—

மேற்கு தொடர்ச்சி மலையில் தாமிரபரணி திட்ட வேலை

***14714—**திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் காரையார் அணை நீர்த்தேக்கத்திற்கு மேல் தாமிரபரணி திட்ட வேலை செய்வதற்கு ஆய்வு வேலைகள் நடைபெற்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த திட்டத்தில் உள்ளடக்கிய வனப்பகுதியில் பணிகள் மேற்கொள்ள 1980-ஆம் ஆண்டு வனச்சட்டப்படி மைய அரசின் ஒப்புதல் தேவை, இத்திட்டத்தினால் வனப்பகுதி பாதிக்கப்படும் என்கிற நிலையை கருத்தில் கொண்டு மைய அரசு இதற்கு ஒப்புதல் தரவில்லை. இக்கருத்தினை சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையும் ஏற்றுக் கொண்டபடியால் இது தொடர்பாக தற்பொழுது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வாய்ப்பில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அருமையான திட்டம். இந்த இடத்திலே மழைக்காலங்களிலே பெரும் வெள்ளம் பெருக்கெடுத்து அந்தத் தண்ணீர் தாமிரபரணி ஆற்றிலே கலந்து, வீணாக கடலிலே போய் கலந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட 5 ஆயிரம், 6 ஆயிரம் ஏக்கர் நிலம், புதிய நஞ்சை நிலங்களாக மாறுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும், அதிலேயிருந்து மின்சாரம் கூட தயாரிக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினுடைய பயனை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, இதைச் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு ஏறத்தாழ 18 கோடி ரூபாய்.

1995 ஏப்ரல் 19]

அம்பாசமுத்திரம் தாலுகா, பாபநாசம் அருகில் காரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான வனப் பகுதியில் நீர்பிடிப்பு பரப்பு மற்றும் கட்டிடம் கட்டுவதற்கு ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் பகுதி ஏறத்தாழ 66 ஹெக்டேர் ஆகும். இந்த அணையைக்கட்டுவதன் மூலம் ஏறத்தாழ புதிய புஞ்சை நிலங்கள் 4,500 ஏக்கர்களும் மற்ற நிலங்களுக்கு பாசன உறுதி 823.23 ஏக்கர்களும் உண்டு என்றுதான் நம்முடைய பிளானிங் அண்டு டிசைனிங், திட்ட மற்றும் வடிவமைப்பு தலைமைப் பொறியாளர் அவர்கள், மைய அரசுக்கு எடுத்து தெரிவித்தார்கள். இதற்கு ஈடாக வனத்துறைக்குக் கொடுக்கப்படவேண்டிய நிலம் விக்கிரமசிங்கபுரம் கிராமத்தில் 132 ஹெக்டேர், அரசு வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் செயலாளர், தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேற்படி திட்டப் பணிக்கான பொதுப்பணித்துறை ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்குவது தொடர்பாக கருத்துரு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த இடத்திற்கு மாற்று இடம் கொடுப்பதற்கான கருத்துருவையும் நாம் இந்திய அரசுக்கு அனுப்பி இருந்தோம். இந்திய அரசு தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க இயலாத சூழ்நிலையை 18-2-1992-இல் தகவல் தெரிவித்துள்ளதால் அதனை ஏற்று இப்பொருள் மீதான தொடர் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக இப்போது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் மைய அரசிடத்திலேயிருந்து இந்த அரசு இதற்கான திட்டம் மற்றும் வடிவமைப்புகளை எல்லாம் ஒருங்கிணைத்து வனத் துறை நிலங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டது. அதற்கு மாற்று நிலங்களும் கொடுப்பதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்கி மைய அரசுக்கு தெரிவித்தது. ஆனால் மைய அரசு இதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலேதான், இப்போது இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், விவசாயத்திற்காக பயன்படும் என்கிற நல்ல கருத்தை அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மலையடிவாரம் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தால் இந்த வனத் துறையின் மூலம் நாங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கிறோம். கிட்டத் தட்ட இந்தக் காரையார் பகுதியிலே 5000-க்கும் மேல் ஜனத்தொகை அங்கே இருக்கிறது; பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, அரசு அலுவலகங்கள் பல உள்ளன. இருந்தாலும்கூட இவர்களுக்கு பஸ் வசதி வேண்டுமென்று நான் கூடுதலாக ஏற்பாடு செய்தால் பஸ் அங்கே விட வேண்டிய நேரத்தில் வனத்துறையினர்

தடுக்கிறார்கள். ஏனென்றால் அங்கே இருக்கின்ற மிருகங்களின் மன நிலை பாதிக்கப்படுகிறது. எனவே பஸ் விடமுடியாது என்று சொல்லுகிறார்கள். காரையாரிலிருந்து திருவனந்தபுரத்திற்கு சாலை போடலாம், 18 கிலோமீட்டர்தான் இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுங்கள் என்று அரசை நான் வற்புறுத்தினால் அதற்கும் மத்திய அரசு அங்கே அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். பக்கத்திலேயிருக்கின்ற கால்நடைகள், ஆடுமாடுகளெல்லாம் மேய்ப்பதற்காக நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படியொரு நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வனத்துறையும், மத்திய அரசாங்கமும் இதற்குத் தடங்கலாக இருப்பது உண்மையிலே வேதனையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுபோன்ற அவசியமான திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து இதை எந்த வழியிலேயாவது இதுபோன்ற அணை கட்டுவதற்கும் சரி அல்லது மற்ற விஷயத்திற்கும் மத்திய அரசிலிருந்து ஏதாவது ஒரு விதி விலக்கு வாங்குவதற்கு வாய்ப்பிருக்கிறதா? அப்படி இருந்தால் இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைச்சரவர்கள் செய்து தருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதி முண்டந்துறை வன விலங்குப் பகுதியை ஒட்டியிருக்கிற பகுதி ஆகவே, நல்ல அடர்ந்த பாசனப்பரப்பு இருக்கின்ற பகுதி என்பதை அரசு அறிந்திருக்கிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூலம் இதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகளிலே நம்முடைய தலைமைப் பொறியாளர், மற்றவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். ஆகவே, இந்த இடம் வனப் பகுதியைச் சேர்ந்த இடமாக இருக்கின்ற காரணத்தினாலேதான் மைய அரசினிடத்திலே ஒப்புதல் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதற்கு அவர்கள் அனுமதி மறுத்து அவர்கள் அனுமதி அளிக்க இயலாது என்ற நிலையைத் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய கோரிக்கையை, அந்தச் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதுபோன்ற நல்ல திட்டங்கள் வருகின்றபொழுது ஏற்கெனவே நாம் பாசனப்பரப்புகளிலே விவசாய நிலங்களுக்குப் பற்றாத சூழ்நிலையிலே இருக்கிறோம். இன்னும் அதிகமான ஏக்கர் நிலங்களுக்கு பாசனப் பரப்பு கொண்டு வருவது அது எதிர்காலத்தில் தேவையை பூர்த்தி செய்வதாக இருக்கும் என்பதையும், மீண்டும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அந்த மத்திய அரசினுடைய வனப் பகுதிக்கு ஈடாக மாற்று இடங்களையும் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் மறுபடியும் வலியுறுத்தி இதற்கான ஆய்வுப் பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.